
மே - ஜூன்
2007
தெளிவு
وَمَا عَلَيْنَا إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ
6
كُلُّ حِزْبٍ بِمَا لَدَيْهِمْ فَرِحُونَ
ஒவ்வொரு கூட்டத்தினரும் தங்களிடம் உள்ளதைக் கொண்டு சந்தோஷப்படுகின்றனர்.
எனவே வாசகர்களாகிய நீங்கள்
وَاعْتَصِمُوا بِحَبْلِ اللَّهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا
அல்லாஹ்வின் கயிற்றை அனைவரும் சேர்ந்து பிடித்துக் கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள்.
30/-
வெளியீடு : ஜமாஅதுல் முஸ்லிமீன்

# ஆசிரியர் கருத்து

உலக மக்கள் அனைவரும் இம்மையிலும மறுமையிலும் துன்பம், துயரங்கள் இன்றி நிம்மதியாக வாழ்வதற்கான பாதையை வெளிக்காட்டும் மார்க்கமே இஸ்லாமாகும்.

இது மனிதனின் சிந்தனையினால் உருவாக்கப்படடதல்ல. மனிதனையும் ஏனைய படைப்பினங்களையும் படைத்து நிர்வகிக்கும் ஏக இறைவனாகிய அல்லாஹ்வினால் உருவாக்கப்பட்ட மார்க்கமாகும்.

இது மனிதனால் பின்பற்ற முடியாத ஒரு கடின மார்க்கமுமல்ல. இந்த மார்க்கத்தைப் பின்பற்றி வாழ்ந்தால் சகல மக்களும் சாந்தி, சமாதானத்துடனும், நீதி நியாயத்துடனும், நேர்மை கண்ணியத்துடுனும் வாழலாம் என்பதை அல்லாஹ்வின் தூதர் அவர்களும் தோழர்களும் நேர்வழியுடளன் நல்லாட்சி நடாத்திச் சென்ற கலீபாக்களும் நிரூபித்துச் சென்றுள்ளார்கள்.

ஆனால் அந்த தூய மார்க்கம் கால ஓட்டத்தில் படிப்படியாக கரைந்து, மக்கள் மத்தியிலிருந்து முழுமையாகவே இல்லாமாலாகிவிடது. இன்று இருப்பது அதன் எச்சங்கள் மாத்திரமே.

மறுமையை நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த மக்கள் உலக ஆசையில் மூழ்கிவிட்டதால், உலகத் தேவைக்கு ஏற்றவிததத்தில் மார்க்கத்தையும் மாற்றி விட்டார்கள். எந்த ஜாஹிலிய்யத்தை, குப்ரை, ஷிர்க்கை இல்லாமல் செய்வதற்காக இஸ்லாம் வந்ததோ, அந்த தூய இஸ்லாம் இன்று அதே ஜாஹிலிய்யத், குப்ர், ஷிர்க், பித்அத் போன்ற வழிகேடுகள் அனைத்தும் கலந்த ஒரு கலப்படமாக ஆகிவிட்டது.

இந்த கலப்படத்தையே இன்று மக்கள் இஸ்லாம் என நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

அன்று குலம், கோத்திரம் எனப் பிரிந்து ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டிருந்த மக்களை இஸ்லாம் வந்து ஒன்று சேர்ந்து ஒருவரை ஒருவர் உளமாற நேசிக்கும் உற்ற தோழர்களாக மாற்றியது. ஆனால் இன்று அதே இஸ்லாத்தைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் மக்கள் தங்களுக்குள் பிளவுபட்டு, கருத்து முரண்பட்டு பல பிரிவுகளாகப் பிரிந்து தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கின்றனர். ஒரே கலிமாவைக் கூறிக் கொண்டு ஷீஆக்கள், ஸுன்னிகள், காதியானிகள், தௌஹீதிகள் என தமமக்குத் தாமே நாமங்களை சூட்டிய நிலையில் ஒருவரை ஒருவர் வசைபாடுகின்றனர்.

உலக மக்கள் அனைவரையும் சத்திய பாதைக்கு அழைக்க வேண்டிய மக்களே இவ்வாறு தமக்குள் குழம்பிக் கொண்டு வழி தெரியாது தடுமாறிக் கொண்டிருந்தால், உலகம் எவ்வாறு மீட்சி பெறும்?

இதை எண்ணி கவலையால் வாடிக் கொண்டிருந்த சில நல்ல உள்ளங்களுக்கு அல்லாஹ் தனது நேர்வழியைத் தெளிவாக்கிக் கொடுத்தான். குர்ஆன், ஸுன்னா மூலம் அல்லாஹ் காட்டிய அந்த நேர்வழியே ஜமாஅதுல் முஸ்லமீனாகும்.

“உலகத்தின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு இஸ்லாம் மார்க்கத்திலேயே உள்ளது. ஆனால் அந்த இஸ்லாம் இன்று உலகத்தில் இல்லை. எனவே அதைக் கண்டு பிடித்து கட்டியெழுப்ப வேண்டும். சகல பிரிவினைகளும் அகற்றப்பட வேண்டும். அழிந்து விட்ட ஒரே தலைமைத்துவம், ஒரே ஜமாஅத் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும்” என்ற இந்த இலட்சியங்களுடன், ஸஹீஹான ஹதீஸ்கள் மூலம் அல்லாஹ்வின் தூதர் அவர்களினால் சுவர்க்கம் செல்லும்

கூட்டம் என நன்மாராயங் கூறப்பட்ட ஜமாஅதுல் முஸ்லிமீன் இப்போது தோன்றிவிட்டது.

உலகத்தின் நாலா பக்கங்களிலும் எவ்வித ஆராவாரமோ, ஆடம்பரமோ இல்லாது அமைதியாக சத்தியத்தை தனது சொல்லாலும் செயலாலும் குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களுடன் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இஸ்லாத்தின் பெயரால் இயங்கும் பல்வேறு பிரிவுகளுக்கும் பின்னால் கழைத்துப் போன மக்கள் படிப்படியாக இந்த சத்தியததிலே வந்து நுழைந்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிம்மதி அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். கடல் போன்ற மார்க்க அறிவை எமது சக்திக்கேற்ப சிறுசிறு துளிகளாகவாவது தூயு வடிவில் வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆதங்கத்திலேயே "தெளிவு" எனும் இச்சிறு நூல் வெளியாகி இப்போது அதன் 6ம் இதழைத் தொட்டுள்ளது.

எதிர்பார்ததததை விட அதிக மக்கள் இதை ஆர்வத்துடுன் படிக்கின்றார்கள். தாங்கள் விட்ட பிழைகளை உணர்கின்றார்கள். ஆனால் இலட்சக்கணக்கான மக்களின் கரங்களுக்கும் இதைச் சென்றடையச் செய்வதற்கு பொருளாதாரம் எமக்குத் தடையாக இக்கின்றது. எனினும் எம்மால் முடிந்தளவு சில ஆயிரம் பிரதிகளையாவது வெளியிடுகின்றோம். அல்லாஹ் நாடியவர்களின் கரங்களை அது சென்றடைகின்றது. இதன் மூலம் ஒரு மனிதனாவது நேர்வழி பெற்று விட்டால், அதுவே எமது வெற்றி,எமது மறுமைக்கான சொத்து.

எனவே எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மையும் உங்களையும் நேரான பாதையின்பால் செலுத்தி, மறுமையில் வெற்றிபெற்ற கூட்டத்தில் சேர்ப்பானாக! என வேண்டி விடைபெறுகின்றேன்.

அன்புடன்

- ஆசிரியர் -

# கேள்வி - பதில்

கேள்வி : 01 ஆண்களோ பெண்களோதங்கள் கரங்களில் மோதிரம் அணியும்போது விரும்பிய விரல்களில் அணியலாமா? அல்லது ஏதும் தடைகள் உண்டா?

பதில் : விரும்பிய விரல்களில் மோதிரம் அணியலாம். ஆனால் இரண்டு விரல்களில் மாத்திரம் மோதிரம் அணிவது தடை செய்யப்பட்டுள்ளது. ஒன்று நடுவிரல், மற்றையது சுட்டு விரல். இவ்விரண்டிலும் இரு சாராரும் மோதிரம் அணியக் கூடாது.

அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

இரண்டு விரல்களில் மோதிரம் அணிவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள் என்று கூறி, நடு விரலையும், சுட்டு விரலையும் சுட்டிக் காட்டினார்கள். ( ஸஹீஹ் முஸ்லிம் : 5460)

கேள்வி : 02 இடது கையில் மோதிரம் அணியலாமா?

பதில் : நபி (ஸல்) அவர்கள் இரண்டு கைகிலும மோதிரம் அணிந்துள்ளார்கள். அதனால் இடது கையில் மோதிரம் அணிவது தடையில்லை.

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

நபி (ஸல்) வெள்ளி மோதிரம் ஒன்றை தங்கள் வலது கரத்தில் அணிந்திருந்தார்கள். ( ஸஹீஹ் முஸ்லிம் : 5454 )

மற்றுமொரு அறிவிப்பில் :

நபி (ஸல்) அவர்களின் மோதிரம் தங்களின் இஇடது கையில் இருந்ததாக அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் : 5456 )

கேள்வி : 03 ஒருவர் தொழுகையில் இருக்கும் போது, ருகூஃ, ஸுஜூத் இவ்விரண்டிலும் குர்ஆன் வசனங்கள் ஓதுவது கூடாது என்பதற்குத் தடைகள் ஏதும் வந்துள்ளனவா?

பதில் : ருகூஃ, ஸுஜூத் ஆகிய இரண்டிலும் குர்ஆன் ஓதுவதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்.

அலி பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

“தங்க மோதிரம் அணிவதையும் பட்டாடை அணிவதையும் ருகூஃ, ஸுஜூதில் குர்ஆன் ஓதுவதையும் நபி (ஸல்) அவர்கள் என்னைத் தடுத்தார்கள். ( ஸஹீஹ் முஸ்லிம் : 5406 )

கேள்வி : 04 ஒருவர் பர்ளோ, ஸுன்னத்தோ தொழுது கொண்டிருக்கும் போது பர்ளான தொழுகைக்கு இகாமத் சொல்லப்படுகின்றது. இப்போது இவர்கள் தொழுகையை முடித்து விட்டு ஜமாஅததுடன் சேர்ந்து கொள்ளலாமா? அல்லது தொழுகையை இடையில் விட்டு விட்டு ஜமாஅத்துடன் சேர்ந்து கொள்ள வேண்டுமா?

பதில் : “பர்ளான தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டு விட்டால், வேறு எந்தத் தொழுகையும் இல்லை” என்று ஹதீஸில் வந்துள்ளதால், ஒருவர் எந்தத் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் இகாமத் சொல்லப்பட்டால், தொழுது கொண்டிருந்த தொழுயையை விட்டு விட்டு ஜமாஅத்துடன் சேர்ந்து கொள்ள வேண்டும்.

தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டால், (அந்த) பர்ளான தொழுகையைத் தவிர வேறு எந்தத் தொழுகையும் இல்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ( ஸஹீஹ் முஸ்லிம் : 1642 )

கேள்வி : 05 இரு கரங்களை உயர்த்தி துஆ கேட்டு விட்டு, இரு கைகளையும் முகத்தில் தடவிக் கொள்வது அன்று தொட்டு வந்து கொண்டிருக்கும் ஒரு வழி முறையாகும். இப்போது புதிதாக தோன்றிய சில உலமாக்கள் அப்படி முகத்தில் தடவுவது "பித்அத்" என்றும் "அதற்கு ஆதாரம் இல்லை" என்றும் கூறி, "பிரார்த்தனை முடிந்ததும் இரு கைகளையும் தடவுவதை விட்டுவிட வேண்டும்" என்றும் கூறுகின்றனர். இக்கூற்று சரியானதா? அப்படி பிழையென்றால், முகத்தில் தடவுவதற்கு சரியான ஆதாரம் என்ன என்பதை தெளிவுபடுத்தவும்.

பதில் : மார்க்கத்தில் இல்லாதவைகளை மார்க்கத்தினுள் புகுத்தும் உலமாக்களும், மார்க்கத்தில் உள்ளவைகளை இலாலதாக்கும் உலமாக்களும் தோன்றி பெருங் குழப்பங்களை உண்டுபண்ணிக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

இப்படி மக்களை வழிகெடுக்கும் தலைவர்களை நபி (ஸல்) அவர்கள் எச்சரிக்கையும் செய்துள்ளார்கள். இப்படி மக்களுக்கு மத்தியில் மார்க்க விடயங்களில் குழப்பங்கள் விளைவிக்கப்படும் போது அவைகளை இனங்காண்பதற்கு அதற்கான சரியான தீர்வுகளை குர்ஆன், ஸுன்னா ஒளியில் "தெளிவு" எனும் எங்களது இச்சஞ்சிகை மக்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது.

இந்தவகையில் துஆவின் பின் கைகளை முகத்தில் தடவுவது சம்பந்தமாக வந்திருக்கும் ஹதீஸையும், அதுபற்றிய இமாம் இப்னு ஹஜரின் கூற்றையும் தருகின்றோம்.

நபி (ஸல்) துஆவில் தங்கள் இரு கைகளையும் உயர்த்தினால் அவ்விரண்டைக் கொண்டும் தங்கள் தடவும் வரை விடமாட்டார்கள்.

( திர்மிதி, அபூதாவூத், இப்னுமாஜா )

இது சம்பந்தமாக 7 ஹதீஸ்கள் வந்துள்ளன. இந்த ஹதீஸ்களில் பலயீனங்கள் காணப்பட்டாலும் இமாம் திர்மிதி இந்த ஹதீஸை சரி கண்டுள்ளார். அதற்குப் பின் தோன்றிய இமாம் இப்னு ஹஜர், இந்த ஹதீஸ் “ஹஸன்” என்ற தரத்தில் உள்ளதாகக் கூறுகின்றார்.

எனவே இமாம் திர்மிதி, இமாம் இப்னு ஹஜர் இவ்விருவரிடத்திலும் இந்த ஹதீஸ் சரி காணப்பட்டுள்ளதால், பிரார்த்திப்பவர்கள் பிரார்த்தனை முடிந்ததும் தங்கள் கையை முகத்தில் தடவிக் கொள்வது நபி வழி என்பது தெளிவாகின்றது.

இதன் விபரம் அல் அத்கார் அந்நவவிய்யா - பக்கம் 435ஐப் பார்க்கவும்.

கேள்வி : 06 ஒரு பெண் மாதவிடாய் காலத்தில் இருக்கும்போதோ, அல்லது கர்ப்பிணியாக இருக்கும் போதோ அவளை தலாக் விடலாமா?

பதில் : ஒரு பெண் மாதவிடாயில் இருக்கும் போது, அவளைத் தலாக் விட இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அப்படி தலாக் சொல்லியிருந்தால், அந்த தலாக் செல்லுபடியாகாது. மீண்டும் அவளை தன் மனைவியாக்கிக் கொள்ள வேண்டும். அதன் பிறகு அவள்

தூய்மையானதன் பின் தனக்கு விருப்பமில்லையாயின் அந்த தூய்மையான காலத்தில் தலாக் விட வேண்டும்.

அடுத்ததாக ஒரு பெண் கர்ப்பிணியாக இருக்கும் போது தலாக் விட இஸ்லாத்தில் எவ்வித தடையும் இல்லை.

ஒரு முறை இப்னு உமர் தங்கள் மனைவியை மாதவிடாய் காலத்தில் தலாக் விட்டு விடார்கள். இதனை அவருடைய தந்தை உமர் கத்தாப் அவர்கள் நபி அவர்களிடம் முறையிட்டார்கள். இதனைக் கேட்ட நபி அவர்கள் உமர் அவர்களிடம் “தங்கள் மகன் அவனை திரும்பவும் மனைவியாக்கிக் கொள்ள வேண்டும்” என்றும் “அவள் தூய்மையானதன் பின் தலாக் விடலாம் அல்லது கர்ப்பிணியாக இருக்கும் போது தலாக் விடலாம்” என்று அவருக்குக் கட்டளையிடுங்கள்”என்று கூறி அனுப்பினார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் - 3644 )

இந்த ஹதீஸிலிருந்து இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன :

01. மாதவிடாய் காலத்தில் ஒரு பெண்ணை தலாக் விடக் கூடாது.

02. கர்ப்பியியான பெண்ணை அவள் குழந்தை பிரசவிக்க முன் தலாக் விடலாம்.

கேள்வி : 07 பருவ வயதை அடையாத சிறு குழந்தைகள் இமாம் ஜமாஅத் நடத்தலாமா?

பதில் : நடத்தலாம்.

அம்ரு பின் ஸலமா கூறுகின்றார் :

எனக்கு ஆறு அல்லது ஏழு வயதிருக்கும் போது என்னை இாம் ஜமாஅத் நடாத்த விட்டார்கள். என்மேல் ஒரு ஆடைதான் இருந்தது. நான் ஸுஜுது செய்தால், ஆடை உயர்ந்து எனது அவ்றத் வெளியாகிவிடும். இதனைக் கண்ட எனது குடும்பத்தில் உள்ள ஒரு பெண் “ எங்கள் இமாமின் அவ்ரத்தை மறைக்கமாட்டீர்களா” என்று கேட்டார்கள். உடனே எனக்கு ஒரு வாங்கி தைத்துத்தந்தார்கள்.

( ஸஹீஹுல் புகாரி - மிஷ்காத் : 1126 )

கேள்வி : 08 மார்க்கத்தில் தடுக்கப்பட்ட ஹராமானவைகள் அல்லது போதை வஸ்துக்களை மருந்துக்கு பாவிப்பது கூடும்” என்று சிலர் கூறுகின்றனர். உதாரணத்திற்கு மதுபானம், அபின் போன்றவைகளை வைத்தியர் மருந்துடன் கலந்தால், அதனை நாம் பாவிக்கலாம்; அது ஹராமாகாது” என்கின்றனர். இஸ்லாமிய கண்ணோட்டத்தில் சரியான பத்வாவா?

பதில் : “மார்க்கத்தல் தடுக்கப்பட்ட ஹராம்களை மருந்துக்கு பாவிப்பது கூடும்” என்ற பத்வா இஸ்லாத்திற்கு முரணானதாகும். ஏனெனில் ஹராமானவைகளில் மருந்து இல்லை என்றுதான் இஸ்லாம் கூறுகின்றது. எனவே ஒருவருக்கு நோய் ஏற்பட்டால், ஹராம் அல்லாதவைகளையே மருந்தாக பாவிக்க வேண்டும்.

நிச்யமாக அல்லாஹ் நோயையும் மருந்தையும் படைத்துள்ளான். எனவே (நோய் ஏற்பட்டால்) சிகிச்சை செய்யுங்கள். ஹராமானதைக் கொண்டு சிகிச்சை செய்யாதீர்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( அல் அஹாதீதுஸ் ஸஹீஹா : 1633)

கேள்வி : 09 சுவனம், நரகம் இவை இரண்டிற்கும் இத்தனை இத்தனை வாயில்கள் உள்ளன என்று ஹதீஸ்களில் வந்துள்ளனவா?

பதில் : சுவனத்திற்கு 8 வாயில்கள் உள்ளன என்றும் நரகத்திற்கு 7 வாயில்கள் உள்ளன என்றும் ஹதீஸ்களில் காணப்படுகின்றன.

சுவனத்திற்கு 8 வாயில்களும் நரகத்திற்கு 7 வாயில்களும் உண்டு என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( அல் அஹாதீதுஸ் ஸஹீஹா : 1812 )

கேள்வி : 10 ஒரு மனிதர் ஒரு பெரும் பாவத்தில் ஈடுபட்டு வருகின்றார். உதாரணமாக விபச்சாரம் என்று வைத்துக் கொண்டால், இவர் மறுமையில் நரகத்திலிருந்து தப்புவாரா? மறுமையில் இவர் நரகத்திலிருந்து மீழ்ச்சி பெற்று சுவனம் நுழைய என்ன செய்ய வேண்டும்?

பதில் : இவ்வாறான பாவத்தில் ஈடுபடுபவர் ஏற்கனவே ஒரு முஸ்லிமாக இருந்தால், உடனே அவர் தௌபாச் செய்து அந்தப் பாவத்திலிருந்து விடுபட்டு, உண்மை முஸ்லிமாக வாழ்ந்து மரணித்தால்,

அவரின் பாவங்களை அல்லாஹ் மன்னித்து சுவர்க்கத்தில் நுழைவிப்பான். அப்படி தௌபாச் செய்யாது அதே நிலையில் மரணித்தால், அல்லாஹ் நாடினால், இவரை மன்னித்து சுவனம் அனுப்புவான். அப்படி அல்லாஹ் நாடவில்லையெனில் அவரை நரகத்தில் புகுத்தி அவர் செய்த குற்றத்திற்குரிய தண்டனையை அனுபவித்த பின் அவரை நரகத்திலிருந்து வெளியேற்றுவான்.

( அல்குர்ஆன் - 4 : 48 )

அதே நேரத்தில் அவர் ஜாஹிலிய்யத்தில் வாழ்பவராக இருந்தால், அவர் சத்தியக் கூட்டத்தில் பைஅத் செய்து நுழைந்து கொண்டால், அவரின் அனைத்து பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும் என்று நபி அவர்கள் கூறியுள்ளார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் : 315, 317 )

கேள்வி : 11 “தொழுகை ஜமாஅத்தாக நடக்கும்போது, இமாமின் ஓதல் மஃமூம்களுக்கு போதுமானது. எனவே மஃமூம் பாதிஹா ஸூரா ஓத வேண்டியதில்லை” எனறதொரு புதிய கருத்தை சிலர் வைக்கின்றனர். இது எந்தளவு சரியானது என்பதை தெளிவுபடுத்தவும்.

பதில் : குர்ஆன், ஹதீஸை சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் இத்தகைய புதுப் புதுக் கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஒரு முஸ்லிம் மனித கருத்துக்களை விட்டு விட்டு குர்ஆன், ஹதீஸை மட்டுமே பின்பற்ற வேண்டும். இந்த அடிப்படையில் இமாமைப் பின்பற்றித் தொழும் ஒரு மஃமூம் கட்டாயம் பாதிஹ ஸூரா ஓதியாக வேண்டும்.

அப்படி ஓதாத பட்சத்தில் அவரின் தொழுகை செல்லுபடியற்றதாகி விடும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் :

ஸூரா பாதிஹா ஓதாவதவருக்கு தொழுகை இல்லை"

( ஸஹீஹ் முஸ்லிம்)

தொழுபவர் இமாமாக இருந்தாலும் சரி, ம:.மூமாக இருந்தாலும் சரி பாதிஹா கட்டாயமாக ஓத வேண்டும். அது மட்டுமல்ல, பாதிஹா ஸூரா ஓதாமல் தொழுதால், அவர் ம:.மூமாக இருந்தாலும் அவருக்குத் தொழுகை இல்லை என்பதே ஹதீஸின் முடிவு.

கேள்வி : 12 நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு ஜும்ஆவிலும் ஸூரத்துல் கா:.ப் ஓதியதற்கு தெளிவான ஆதாரம் இருக்கின்றதா? நபி (ஸல்) அவர்கள் ஸூரா கா:.பிலிருந்து சில வசனங்களை ஓதி விளக்கினார்களே தவிர, வெறுமனே ஸூரா கா:.பை ஓதவில்லை" என்று சிலர் கூறுகின்றனர்.

இன்னும் சிலர் இதற்கு மாற்றமான கருத்தையும் முன்வைக்கின்றனர். இதன் சரியான விளக்கத்தைத் தரவும்.

பதில் : சிலர் குர்ஆன், ஹதீஸிற்கு தங்களது மனோஇச்சையின்படி விளக்கம் கொடுத்து, மக்களுக்கு மத்தியில் பெருங் குழப்பத்தை ஏற்படுத்திவிடுகின்றனர். எனவே மார்க்க விடயங்களில் ஒரு முஸ்லிம் இப்படிப்பட்டவர்களின் வலையில் சிக்கி விடாது, தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் நபி அவர்களின் வழிமுறை என்ன என்பதைக் காட்டக்கூடிய ஸஹீஹான ஹதீஸ்

ஒன்றினை கீழே தருகின்றோம். இவர்கள் கூறும் கருத்துக்கள் இதில் காணப்படுகின்றதா என்பதனை வாசகர்கள் புரிந்து கொள்ளவும்.

உம்மு ஹிஷாம் என்ற ஸஹாபிப் பெண்மணி கூறுகின்றார்கள் :

"கா.ஃ.ப் வல் குர்ஆனில் மஜீத்" என்ற (50வது அத்தியாயம் ) என்ற ஸூராவை நபி (ஸல்) அவர்களின் வாயிலிருந்து நான் எடுத்துக் கொண்டேன் (மனனமிட்டேன்). அதனை அவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மிம்பரில் நின்றவண்ணம் ஓதுவார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் : 2009 )

மற்றுமொரு அறிவிப்பில் :

"நான் கா.ஃ.ப் ஸூராவை நபி (ஸல்) அவர்களின் வாயிலிருந்தே மனனமிட்டேன். அவர்கள் குத்பா ஓதும்போது, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மிம்பரில் நின்றவண்ணம் ஓதுவார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் : 2011, 2012)

இந்த ஹதீஸில் குறிப்பிட்ட சில வசனங்களை மட்டும் ஓதினார்கள் என்றோ, அல்லது சில வசனங்களை ஓதி விளக்கம் கொடுத்தார்கள் என்றோ காணப்படவில்லை. வெறுமனே நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாக்களை குழி தோண்டி புதைக்க இவர்கள் எடுக்கும் முயற்சியே தவிர, வேறொன்னுமில்லை.

எனவே ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஜும்ஆவில் ஸூரத்துல் கா.ஃ.ப் ஓதுவது நபி வழியாகும். இந்த நபி வழி முற்றாக விடுபட்டு விட்டது. உலகில் வேறு எந்த அமைப்பிலும் இந்த ஸுன்னா ஹயாத்தாக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸஹீஹான ஹதீஸ் ஒன்று

மனித நடமாட்டம் (முற்றாக) குறைந்த பின் (வெளியில்) நடமாடுவதை குறைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், அல்லாஹ்வுக்கென சில படைப்புக்கள் இருக்கின்றன. அவைகளை அந்நேரத்தில் பரவச் செய்கின்றான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( அல் அஹாதீஸுஸ் ஸஹீஹா : 1518 )

குறிப்பு :

இரவு நேரங்களில் மனித நடமாட்டம் குறைந்ததும் வெளியில் செல்லாது, வீடுகளில் அடங்கியிருக்க வேண்டும். ஏனெனில் அல்லாஹ்வின் சில படைப்புக்கள் இருக்கின்ற. அவைகள் மனித நடமாட்டம் குறைந்ததும் பூமியில் பரவ ஆரம்பித்து விடும். அதனால் சில தீங்குகள் ஏற்பட வாய்ப்புண்டு.

# மவ்ழூ, ( இட்டுக்கட்டப்பட்ட) ஹதீஸ் ஒன்று

கொஞ்ச நேரம் (அல்லாஹ்வைப் பற்றி) சிந்திப்பது 60 வருடங்கள் இபாதத் செய்வதை விடச் சிறந்தது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( அபூஷெய்க் )

இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும். இந்த அறிவிப்பில் உள்ள அறிவிப்பாளர்களில் உத்மான் என்பவரும் அவரின் ஆசரியர் இஸ்ஹாக் பின் நஜீஹ் என்பவரும் பொய்யர்களாவர். இமாம் இப்னு ஜவ்ஸி இதனை இட்டுக்கட்டப்பட்டது என்கின்றார்.

(அல் அஹாதீது லயீபா வல் மவ்லூஆ : 173 )

# லயீபான ஹதீஸ் ஒன்று

ஒரு மலை தன் இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மாறிவிட்டது என்று நீங்கள் கேள்விப்பட்டால், அதனை நம்புங்கள். ஆனால் ஒரு மனிதனின் குணம் மாறிவிட்டது என்று கேள்விப்பட்டால், அதனை நம்பாதீர்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அஹ்மதில் பதிவாகியுள்ளது. இது பலயீனமான செய்தியாகும்.

( மிஷ்காத் : 123 )

இது பலயீனமாகக் காரணம், இதன் அறிவிப்பாளர் தொடர் அறுபட்டுள்ளது. அதாவது "முன்கதி.ஃ." என்று கூறப்படும். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் இருக்கும் ஸுஹ்ரி என்பவர், அபூதர்தாவை சந்திக்கவில்லை. மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறிய கீழே வரக்கூடிய ஸஹீஹான ஹதீஸிற்கு இது மாற்றமாக இருப்பதினாலும் இது பலயீனமாகிவிடுகின்றது.

யார் தன் குணத்தை மாற்றி அழகாக்கிக் கொள்கின்றாரோ, அவருக்கு சுவனத்தில் உயர்ந்த இடத்தில் ஒரு வீட்டிற்கு நான் பொறுப்பு என நபி (ஸல்) அவர்களஂ" கூறினார்கள்.

( அபூதாவூத் )

இந்த ஸஹீஹான ஹதீஸிலிருந்து ஒருவர் தன் குணத்தை மாற்றலாம் என்பது தெளிவாகின்றது. ஆனால் பலயீனமான செய்தியில் "குணத்ததை மாற்ற முடியாது" என்று ஸஹீஹான ஹதீஸிற்கு நேர் முரணான கருத்து கூறப்பட்டுள்ளது.

( அல் அஹாதீஸுஸ் ஸஹீஹா வல் லயீபா : 135 )

# தொழுகை

-தொடர் : 05-

## தயமும் செய்யும் முறை

01. தயமும் செய்வதாக இருந்தால் இரு கரங்களையும் தூய மண்ணில் அடித்து பிறகு இரு கரங்களையும் ஊதிவிட வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் தன் இரு கரங்களையும் பூமியில் அடித்து அவ்விரண்டிலும் உள்ளவைகளை ஊதிவிட்டார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

தன் இரு கரங்களையும் பூமியில் ஒருமுறை அடித்தார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

“தூய்மையான மண்ணில் தயமும் செய்யுங்கள்” என அல்லாஹ் கூறுகின்றான்.

(ஸூரதுல் மாயிதா : 06)

02. பிறகு இரு கரங்களையும் மணிக்கட்டுவரை தடவ வேண்டும். இடது கையினால் வலது கையின் மேற் புறத்தையும், வலது கையினால் இடது கையின் மேற் புறத்தையும் தடவ வேண்டும். பிறகு இரு கரங்களினாலும் முகத்தைத் தடவ வேண்டும்.

பிறகு அவ்விரண்டையும் கொண்டு மஸ்ஹ் செய்தார்கள். அதாவது, தன் (வலது) கரத்தின் மேற் பகுதியை இடது கரத்தைக் கொண்டும் அல்லது தன் இடது கரத்தின் மேற் பகுதியை தன் (வலது) கரத்தைக் கொண்டும் தடவினார்கள். பிறகு அவ்விரண்டையும் கொண்டு தன் முகத்தை தடவினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

**மற்றுமொரு அறிவிப்பில்**

அவ்விரண்டையும் கொண்டு தன்முகத்தையும், தன் இரு கரங்களையும் மஸ்ஹ் செய்தார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

பிறகு தனது இடத கரத்தைக் கொண்டு தன் வலது கரத்தின் மீதும், தன் வலது கரத்தைக் கொண்டு இடது கரத்தின் மீதுமாக இரு கரங்களையும் மஸ்ஹ் செய்துவிட்டு பிறகு தன் முகத்தை தடவினார்கள்.

(அல் ஹாபிழ் - பத்ஹுல் பாரி)

பிறகு உன் வலது கரத்தை கொண்டு இடது கரத்தின் மீதும், உன் இடத கரத்தைக் கொண்டு உன் வலது கரத்தின் மீதும் தடவி விட்டு, பிறகு உன் முகத்தின் மீதும் தடவுவாய்.

(அல் இஸ்மாயிலிய்யி – பத்ஹுூல் பாரி)

# தயமும் தொடர்பான பல்வேறு விடயங்கள்

01. தண்ணீர் இல்லாத சந்தர்ப்பத்தில் தயமும் செய்துக் கொண்டு தொழுவது அவசியம்.

“நீங்கள் நோயாளிகளாகவோ, அல்லது பிரயானத்திலோ இருந்து, அல்லது உங்களில் ஒருவர் மலசலம் கழித்து விட்டு வந்து, அல்லது நீங்கள் பென்களைத் தீண்டிவிட்டு வந்து, நீரைப் பெற்றுக் கொள்ளவில்லையென்றால், சுத்தமான மன்னில் தயமும் செய்துக் கொள்ளுங்கள்.” என அல்லாஹ் கூறுகின்றான்.

(ஸூரத்துல் அல் மாயிதா : 06)

02. தயமும் வுழூவுக்கு பகரமானது மாத்திரமல்லாமல் குளிப்பிற்கும் பகரமாகும். குளிப்பு கடமையாகி தண்ணீர் இல்லையென்றால் தயமும் செய்துக் கொண்டு தொழ வேண்டும்.

ஒரு மனிதர் “எனக்கு முழுக்குடைய நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனினும் நீர் கிடையாது” எனக் கூறினார். அதற்கு அல்லாஹ்வின்

தூதர் “உன் மீது மண்ணை அவசியப்படுத்துகின்றேன். ஏனென்றால் நிச்சயமாக அது உனக்கு போதுமானதாகும்.”

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

03. குளிப்பு கடமையாகி உடலில் ஏதேனும் ஓர் இடத்தில் காயம் இருக்குமேயானால் தயமும் செய்துக் கொள்ளலாம். பிறகு காயத்தின் மீது துணியைக் கட்டி அந்த துணியின் மீது மஸ்ஹ் செய்யவும். பிறகு மீதி உடம்பைக் கழுவவும்.

“நிச்சயமாக தயமும் செய்து தன் காயத்தில் ஒருதுணியைக் கட்டி அதன் மீது மஸ்ஹ் செய்து பிறகு தன் ஏனைய உடம்பைக் கழுவிக் கொள்வது அவருக்கு போதுமானதாக இருக்கின்றது” என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறினார்கள்.

(அபூதாவூத், இப்னுமாஜா)

04. ஸ்கலிதமாகி கடும் குளிரின் காரனமாக குளிப்பதில் அபாய நிலையை உணர்ந்தால் தொடையின் மேல் மேல் பகுதிகளைக் கழுவிக் கொண்டு குளிப்பதற்கு பதிலாக தயமும் செய்து பிறகு வுழூச் செய்து தொழட்டும். அல்லது தொழுவிக்கட்டும்.

அம்ர் இப்னு ஆஸ் அவர்கள் கூறுகின்றார்கள் “ நான் ஒரு குளிருடைய இரவிலே ஸ்கலிதமானேன்...... குளித்தால் மரணமாகிவிடுவேன் என அஞ்சி தயமும் செய்து பிறகு தொழுதேன்.....” “ அம்ரே! உன் தோழர்களுடன் நீ முழுக்காகிய நிலையிலேயா தொழுதாய்? ” என அல்லாஹ்வின் தூதர் கேட்டார்கள். “குளிப்பதிலிருந்து எது என்னை தடை செய்ததோ அதனை அவர்களுக்கு அறிவித்து விட்டு, “உங்களுடைய

ஆத்மாக்களை நீங்களாகவே கொலை செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது இரக்கமுடையவனாக இருக்கின்றான் என்று அல்லாஹ் கூறுவதை நிச்சயமாக நான் செவிமடுத்துள்ளேன்” என்றும் கூறினேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் சிரித்துவிட்டு

எதுவும் தவரில்லை. மற்றுமொரு அறிவிப்பில் தன் தொடையின் மேற் பகுதிகளைக் கழுவி, வுழூச் செய்து பிறகு தொழுதார்கள் என்று இடம் பெற்றுள்ளது.

(அபூதாவூத் - பத்ஹுல் பாரி)

05. நோயாளியும் தயமும் செய்து தொழுகையை நிறைவேற்றவும்.

நீங்கள் நோயாளிகளாக இருந்தால்...... தூய மண்ணை நாடுங்கள் (தயமும் செய்துக் கொள்ளுங்கள்).

(4 : 41)

**குறிப்பு** : குளிப்பிற்கு பகரமான தயமும்மாக இருக்கட்டும். அல்லது வுழூவிற்கு பகரமான தயமும்மாக இருக்கட்டும். இரண்டினதும் செயல்முறை ஒன்றேயாகும்.

# தலைப்பாகை காலுறைகள் மீது “மஸ்ஹ்” செய்தல்

01. தலையின் மீது தலைப்பாகை வேறேதாவது துணி இருக்குமேயானால் வுழூச் செய்கின்ற போது தலையைத் திறந்து மஸ்ஹ்

செய்ய வேண்டிய அவசியமில்லை. மாராக அத்தலைப்பாகையின் மீது மஸ்ஹ் செய்யலாம்.

“நபி (ஸல்) அவர்கள் தன் தலைப்பாகை மீது மஸ்ஹ் செய்வார்கள்.”

(ஸஹீஹுல் புகாரி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரு காலுறைகள் மீதும், தலையை மூடியிருந்த துணியின் மீதும் மஸ்ஹ் செய்தார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

02. காலுறைகள் தூய்மையாக இருக்கும் நிலையில் அணிந்திருந்தால் வுழூச் செய்யும் போது காலுறைகள் மீது மஸ்ஹ் செய்துக் கொள்ள முடியும். கால்களைக் கழுவ வேண்டிய அவசியமில்லை.

“நிச்சயமாக நான் அவ்விரண்டையும் தூய்மையாக இருக்கும் நிலையில் நுழைத்தேன்.” எனக் கூறிவிட்டு அவ்விரண்டின் மீதும் அஸ்ஹ் செய்தார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

03. பிரயாணி மூன்று பகல்கள், மூன்று இரவுகள், ஊர்வாசி ஓர் இரவு, ஒரு பகல் காலுறைகள் மீது மஸ்ஹ் செய்துக் கொள்வார்கள்.

பிரயாணிக்கு முன்று பகல்கள், மூன்று இரவுகளையும், ஊர்வாசிக்கு ஒரு பகலையும், ஓர் இரவையும் ஆக்கினார்கள்.

(ஸஹீஹுல் முஸ்லிம்)

04. நீண்ட காலுறை, செருப்புகளின் மீதும் மஸ்ஹ் செய்துக் கொள்ள முடியும்.

வுழூச் செய்து விட்டு இரு நீண்ட காளுறைகள் மீதும், இரு செருப்புகளின் மீதும் "மஸ்ஹ்" செய்தார்கள்.

(அபூதாவூத், திர்மிதி - ஸஹீஹ்)

வுழூச் செய்து விட்டு தன் இரு பாதணிகளின் மீதும் மஸஹ் செய்தார்கள்.

(அபூதாவூத் - ஸஹ்ஹஹு அல்பானி)

மற்றுமொரு அறிவிப்பில் இப்னு உமரைத் தொட்டும் வருகிறது:

தன் இரு கால்களிலும் இருக்கக் கூடிய இரு பாதனிகள் மீது மஸ்ஹ் செய்வார்கள்.

(முஸ்னத் பஸ்ஸார் - ஸஹீஹ்)

05. காலுறைகள் மீது மஸ்ஹ் செய்வதற்கான முறை வலது கரத்தை வலது காலின் காலுறையின் மீதும், இடது கரத்தை இடது காலின்

காலுறையின் மீதும், வைத்து இரு காலுறைகளின் மேற்புறஹ்களையும் ஒரு முறை தடவ வேண்டும்.

தனது வலது கரத்தை தன் வலது காலுரையின் மீதும், தனது இடது கரத்தை இடது காலுரையின் மீதும் வைத்து அவ்விரண்டினதும் மேற்புரங்களை ஒரு முறை தடவினார்கள்.

(பைஹகி - ஹசன்)

# தொழுகை நேரங்கள்

**01. பஜ்ரின் நேரம்:** ஸுபஹ் ஸாதிக் உண்மையான ஸுபஹிலிருந்து சூரியன் உதயமாகியதும் முற்றுப் பெறுகிறது.

“ஸுபஹ் தொழுகையின் நேரம் பஜ்ர் உதயமாகியது முதல் சூரியன் உதயமாகும் வரையிலாகும்.” என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் முஸ்லிம்)

**02. ளுகருடைய நேரம்:** சூரியன் சாய்ந்ததன் பிறகு ஆரம்பித்து அஸருடைய நேரம் வராத வரை நிலைத்திருக்கின்றது. அதாவது ளுகருடைய நேரம் ஒரு மனிதனுடைய நிழல் அவருடைய உயரத்தின் அளவிற்கு வராத வரை நிலைத்திருக்கும். நிழலை அளக்கின்ற போது சூரியன் சாய்கின்ற நேரத்திலுள்ள நிழல் அகற்றப்பட வேண்டும்.

ளுகருடைய நேரம் அஸருடைய நேரம் வராத வரை இருக்கின்றது.

(ஸஹீஹ் முஸ்லிம்)

சூரியன் சாய்ந்து ஒரு மனிதனின் நிழல் அவனுடைய உயரம் ஆகும் வரை ளுகருடைய நேரம் இருக்கின்றது.

(ஸஹீஹ் முஸ்லிம்)

சூரியன் சாய்ந்து நிழல் செருப்புப் பட்டியஜின் அளவு இருந்த போது ளுகரைத் தொழுதார்கள். பிறகு நிழல் செருப்புப் பட்டியின் அளவு ஆகி ஒரு மனிதனுடைய உயரத்தின் அளவிற்கு நிழல் வந்தபோது அஸரைத் தொழுதார்கள்.

(நஸாஈ - ஹசன்)

**குறிப்பு:**

காலையிலிருந்து நன்பகல் வரை நிழல் அதிகரித்தே செல்கிறது. சரியாக நன்பகல் நேரத்தில் நிழல் அதிகர்ப்பது தடைப்பட்டு விடுகின்றது. சற்று நேரத்தின் பிறகு மீண்டும் நிழல் அதிகர்க்கத் துவங்குகின்றது. இதுவே ஸவாலுடைய நேரம். அதாவது சூரியன் சாயும் நேரம் என கூறப்படும். இந்த நேரத்திலிருந்து ளுகருடைய நேரம் ஆரம்பிக்கின்றது.

கடும் சூடாக இருந்தால், சூடு குறையும் வரை ளுகரைத் தாமதப்படுத்தி தொழுது கொள்ள முடியும்.

“சூடு கடுமையாக இருந்தால், தொழுகையைக் குளிராக்குங்கள் (தாமதப்படுத்துங்கள்).”

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

**03. அஸருடைய நேரம்:** ளுகருடைய நேரம் முடிவடைந்ததும் அஸருடைய நேரம் ஆரம்பமாகின்றது. அதாவது ஒரு மனிதனது நிழல் அவனது உயரத்தின் அளவு லருகின்ற போது அஸருடைய நேரம் ஆரம்பமாகி, சூரியன் மஞ்சலாகின்ற வரைக்கும் இருக்கும்.

“அஸருடைய நேரம் வராதவரை ளுகருடைய நேரம் இருக்கும். சூரியன் மஞ்சல் நிறமுள்ளதாக ஆகாதவரை அஸருடைய நேரம் தொடர்ந்து இருக்கும்.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

**குறிப்பு:**

நிழலை அளக்கின்ற போது நிழலிருந்து அடிப்படையான நிழல் நீக்கப்பட வேண்டும்.

“நிழல் செருப்புப் பட்டியின் அளவு வந்து ஒரு மனிதனுடைய உயரத்தின் அளவும் வந்து விட்ட போது அஸரைத் தொழுதார்கள்.”

(நஸாஈ - ஹஸன்)

04. மஃரிபுடைய நேரம்: சூரியன் மறைந்தது முதல் ஆரம்பமாகின்றது. செவ்வானம் மறையாதவரை நிலைத்திருக்கின்றது.

சூரியன் மறைந்த போது ம.்.ரஜபை தொழுவித்தார்கள்.

(ஸஹீஹுல் முஸ்லிம்)

“செவ்வானம் மறையாது இருக்கும் வரை ம.்.ரிப் தொழுகையின் நேரம் இருக்கும் வரை ம.்.ரிப் தொழுகையின் நேரம் இருக்கும்.” என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் முஸ்லிம்)

05. **இஷாவின் நேரம் :** செவ்வானம் மறைந்தது முதல் ஆரம்பமாகிய நள்ளிரவு வரை நிலைத்திருக்கம்

செவ்வானம் மறைந்த பொழுது இஷாவைத் தொழுவித்தார்கள்

(ஸஹீஹ் முஸ்லிம்)

“நள்ளிரவு வரை இஷாவின் நேரம் இருக்கின்றது” என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

# பலதரப்பட்ட விடயங்கள்

01. இமாம் தாமதித்து தொழுகை நடாத்துவாரேயானால் உரிய நேரத்தில் தனித்துத் தொழுது கொள்ளவும். பிறகு ஜமாஅத்தோடு அவருக்கு தொழக்கிடைக்குமேயானால் அவர் ஜமாஅத்தோடு சேர்ந்த தொழட்டும். மாறாக "நான் தொழுது விட்டேன். எனவே நான் தொழ மாட்டேன்." எனக் கூற வேண்டாம். இந்தத் தொழுகை அவருக்கு உபரியானதாக ஆகிவிடும்.

"தொழுகையை அதன் உரிய நேரத்தில் தொழுது கொள். நீ அவர்களோடு அதனை அடைந்துக் கொண்டால் தொழுது கொள். ஏனென்றால் அது நிச்சயமாக உபரியாக இருக்கும்."

(ஸஹீஹுல் முஸ்லிம்)

மற்றுமொரு அறிவிப்பில்

"நிச்சயமாக நான் தொழுது விட்டேன் எனவே நான் தொழ மாட்டேன். எனக் கூறாதே!

(ஸஹீஹ் முஸ்லிம்)

02. பஜ்ர் தொழுகையினுடைய ஒரு ரக்அத் சூரியன் உதயமாவதற்கு முன் கிடைத்துவிட்டால் அவர் அத்தொழுகையை பூரணப்படுத்தட்டும். இவ்வாறு அஸர் தொழுகையின் ஒரு ரக்அத்தை சூரியன் மறைவதற்கு முன்னர் அடைந்துக் கொண்டால் அவர்அத்தொழுகையை பூரணப்படுத்தட்டும். இவ்விரு அமைப்புகளிலும் அவர் அவ்விரு தொழுகைகளையும் உரிய நேரத்தில் பெற்றுக் கொண்டார் எனக் கருதப்படும்.

எவர் ஸுபஹிலிருந்து ஒரு ரக்அத்தை சூரியன் உதயமாவதற்கு முன் அடைந்துக் கொள்கின்றாரோ நிச்சயம் அவர் ஸுபுஹுத் தொழுகையை அடைந்துக் கொண்டார். சூரியன் மறைவதற்கு முன் எவர் அஸரிலிருந்து ஒரு ரக்அத்தை அடைந்து கொள்கின்றாரோ நிச்சயம் அவர் அசரை அடைந்துக் கொண்டார்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

புகாரியினுடைய மற்றொரு அறிவிப்பில்

“அவர் தன் தொழுகையை பூரணமாக்கட்டும” என வந்துள்ளது.

03. இந்தச் சலுகை வேண்டுமென்றே தொழுகையை பிற்படுத்தக் கூடியோருக்கு அல்ல. மாறாக வேண்டுமென்றே தொழுகையைப் பிற்படுத்தக் கூடியவனின் தொழுகை நயவஞ்சகனின் தொழுகையாகக் கருதப்படும்.

அது நயவஞ்சகனின் தொழுகையாகும். அவன் சூரியனை உட்கார்ந்துக் கவனித்து விட்டு அது (சூரியன்) ஷைத்தானின் இரு கொம்புகளுக்கிடையிலானதும் (எழுந்து) தொழுவான்.

(ஸஹீஹுல் முஸ்லிம்)

04. எவன் மறந்து விடுகின்றானோ அல்லது தொழுகையின் நேரத்தில் தூங்கி விடுகின்றானோ நினைவு வந்ததும், விழித்ததும் அத்தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளட்டும்.

“உங்களில் ஒருவர் தொழாமல் உறங்கி விடுகின்றானேயானால் அல்லது அதனை விட்டும் அவருக்கு மறதி ஏறபட்டு விடுமேயானால் அவருக்கு அது நினைவு வந்ததும் தொழுது கொள்ளவும்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

புகாரியுடைய அறிவிப்பில் :

“எவனொருவன் தொழுகையை மறந்து விடுகின்றானோ அவனுக்கு அது நினைவு வந்ததும் தொழுது கொள்ளட்டும். அதற்கு இதை தவிர வேறு எந்தக் குற்றப் பரிகாரமும் கிடையாது.” என இடம் பெற்றுள்ளது.

05. பல தொழுகைகள் தப்பி விடுமேயானால் அவைகளை முறைப்படி தொழுது கொள்ளல் வேண்டும்.

சூரியன் மறைந்ததன் பிறகு அஸரைத் தொழுதார்கள். அதன் பின் மஃ.ரிப்பை தொழுதார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

06. பஜருடைய தொழுகை தப்பிவிட்டால் சூரியன் உதித்துக் கொண்டிருக்கும் போது அதனைத் தொழ வேண்டாம். சூரியன் உதித்து உயர்ந்து வெண்மையாகி ஒளி வீசத் துவங்கியதன் பிறகு தொழ வேண்டும். பிரயானத்தில் எந்த இடத்தில் கழாவாகியதோ அந்த இடத்தில் தொழுகையை நிறைவேற்றக் கூடாது. வேறொரு இடத்திற்கு சென்று அதை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் ஷைத்தான் அந்த இடத்திற்கு வந்து விடுகின்றான். அஸர் தொழுகை தப்பி விடுமேயானால் சூரியன் மறைத்துக் கொண்டிருக்கும் நிலையில் அதனை நிறைவேற்ற வேண்டாம். சூரியன் பூரணமாக மறைந்த பிறகு அதனை நிறைவேற்ற வேண்டும்.

நாங்கள் நபி (ஸல்) அவர்களோடு உறங்கினோம். சூரியன் உதிக்கும் வரை நாங்கள் தூக்கத்திலிருந்து எழவில்லை. (எழுந்த பிறகு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் “ஒவ்வொருவரும் தன் வாகனத்தின் கடிவாளத்தை பிடித்துக் கொண்டு (இந்த இடத்திலிருந்து) செல்லட்டும். ஏனென்றால் நிச்சயமாக இந்த இடம் இருக்கின்றதே இதில் ஷைத்தான் எங்களிடத்தில் வந்து விட்டான்.

மற்றுமொரு அறிவிப்பில்:

சூரியன் உயருகின்ற வரையில் நடந்தோம். பிறகு (வாகனத்தை விட்டு) இறங்கினார்கள்.

மற்றுமொரு அறிவிப்பில்:

சூரியன் வெண்மையாகின்ற வரை நடந்தோம். பிறகு இறங்கி எங்களுக்குத் தொழுகை நடாத்தினார்கள்.” என்றுள்ளது

(ஸஹீஹ் முஸ்லிம்)

07. தூங்கிக் கொணடிருப்பவரை தொழுகைக்காக எழுப்பி விட வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (வீட்டிலிருந்து) புறப்பட்டுச் செல்லும் போது மக்களை “தொழுகை, தொழுகை” எனக் கூறி தூக்கத்திலிருநது எழுப்பிவிடலானார்கள். மேலும் அவர்கள் வெளியேறிச் செல்லுகின்ற போது மக்களைத் தொழுகைக்காக எழுப்பி விடக் கூடியவர்களாக இருந்தார்கள்.

(அஹ்மத், அபூதாவூத், நஸாஈ, புலூகுல் அமானி)

## எப்போது பிள்ளைகளுக்கு தொழுகையைக் கொண்டு கட்டளை இடப்படும்

01. பிள்ளைகளின் வயது ஏழாக ஆகும் போது அவர்களுக்குத் தொழுகையைக் கொண்டு கட்டளையிட வேண்டும். அவர்கள் பத்து வயதை அடையும் போது தொழுகையை விட்டதற்காக அடித்து அவர்களைத தொழ வைக்க வேண்டும்.

உங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் ஏழு வயதாக இருக்கும் போது தொழுகையை ஏவுங்கள். அவர்கள் பத்து வயது பிள்ளைகளாக இருக்கும் பொழுது அதற்காக அவர்களை அடியுங்கள்.

(அபூதாவூத் - ஸஹீஹ்)

# அதானும் இகாமத்தும்

01. அதான் கூறுபவர் உயர்ந்த இடத்தில் ஏறி அதான் கூற வேண்டும்.

“பிலால் (ரலி) அவர்கள் எனது வீட்டின் மீது உட்கார்ந்து இருக்கக் கூடியவர்களாக இருநததார்கள். மதீனாவிலே இருக்கக் கூடிய வீடுகளில் அது மிகவும் உயர்வானதாக இருந்தது. பஜ்ர் உதயமாகுவதைக் கண்டால் ஏறிச சென்று அதான் கூறுவார்கள்.” என ஒரு பெண்மனி கூறுகின்றார்கள்.

(அபூதாவூத் - ஹசன்)

“றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு அதான் கூறுவதற்கு இருவர் இருந்தார்கள்...... இவர் இறங்க அவர் ஏறுவார்.

(அபூதாவூத் - ஹசன்)

02. அதான் கூறும் போது அதான் கூறுபவர் தன் வரல்களை காதினுள் வைத்துக் கொள்ள வேணடும்.

“அதான் கூறிக் கொண்டிருக்கும் போது நான் பிலாலைக் கண்டேன்... (அதன் போது) அவர்களது இரு விரல்களும் தங்களது காதுகளுக்குள் இருந்தன.” என அபூ ஜுஹைபா கூறுகின்றார்கள்.

(திர்மிதி)

03. “ஹய்ய அலஸ் ஸலாத், ஹய்ய அலல் பலாஹ்” என்ற கூறும் போது வலது இடதாக திரும்ப வேண்டும்.

“பிலால் அவர்கள் அதான் கூறும் போது அவர்களுடைய வாய் அங்கும் இங்கும் செல்வதை நான் கவனிக்கலானேன். வலது இடதாக “ஹய்ய அலஸ் ஸலா , ஹய்ய அலல் பலாஹ்” என அபூ ஜஹீபா கூறுகின்றார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

04. அதான் கூறுபவருடைய அதானை செவிமடுக்கக் கூடியவர்கள் அதே வார்த்தைகளையே மீட்டிக் கூறிக் கொள்ள வேண்டும்.

“நீங்கள் முஅத்தின் அதான் கூறுவதை செவிமடுத்தால் அவர் கூறுவது போன்றே நீங்கள் கூறுங்கள்”

(ஸஹீஹ் முஸ்லிம்)

05. அதான் கூறுபவர் “ ஹய்ய அலஸ் ஸலா” அல்லது “ஹய்ய அலல் பலாஹ்” என்று கூறும் போது அதனை செவிமடுப்பவர்கள் “லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்” என்று கூறிக் கொள்ள வேண்டும்.

முஅத்தின் (ஹய்ய அலஸ் ஸலா) எனகட கூறியதும் அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் “லா ஹவ்ல வலா குவ்வம இல்லா பில்லாஹ்” என்று கூறினார்கள்.

(ஸஹீஹுல் முஸ்லிம்)

06. அதானும் இகாமத்தும் இடைவெளி இன்றி சேர்த்ததாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு அதானுக்கும், இகாமத்துக்கும் இடையில் வுழூச் செய்யக் கூடியவர் தன் தேவையிலிருந்தும், உணவருந்தக் கூடியவர் உணவருந்துவதிலிருந்தும் இலகுவாக விடுபடுவதற்கான இடைவெளி இரக்க வேண்டும். குறைந்த பட்சம் இரண்டு ரக்அத்துகள் தொழ முடியுமானதாக இருக்க வேண்டும்.

“ ஒவ்வொரு அதானுக்கும், இகாமத்துக்கும் இடையில் தொழுகை உண்டு.” என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹுல் முஸ்லிம்)

“உனது அதானுக்கும் இகாமத்துக்கும் இடையில் வுழூச் செய்பவர் தன் தேவையை இலகுவாக நிறைவேற்றுவதற்கும் சாப்பிடுபவர் தனது உணவிலிருந்து இலகுவாக விடுபடுவதற்குமான இடைவெளியை ஆக்கிக் கொள்” என ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அஹ்மத், ஸஹீஹ் அல்ஸாமிஉஸ் ஸகீர் லில் அல்பானி)

07. அதானின் ஓசையை செவிமடுத்ததும் பின்வரும் வார்த்தைகளை ஓத வேண்டும்.

**அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வஅன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு. ரழீத்து பில்லாஹி ரப்பன் வபி முஹம்மதின் ரஸுலன் வபில் இஸ்லாமி தீனா.**

**மொழி பெயர்ப்பு :**

அல்லாஹ் ஒருவனைத் தவிர தீர்ப்பாளனும், கட்டுப்படத் தகுதியானவனும் எவருமில்லையென்றும் நான் சான்று பகர்கின்றேன். அவருக்கு நிகராகவும் எவருமில்லை. நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியார் என்றும், அவனுடைய தூதர் என்றும், சாட்சி கூறுகின்றேன். நான் அல்லாஹ்வை ரப்பென்றும், தூதரென்றும், இஸ்லாத்தை மார்க்கமென்றும் பொருந்திக் கொள்கின்றேன்.

இந்த வார்த்தைகளை ஓதக் கூடியோரின் அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படகின்றன.

“யார் முஅத்தின் அதான் கூறுகின்ற போது அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு ...... என்று கூறுகின்றாரோ அவருடைய பாவங்கள் அவருக்காகக மன்னிக்கப்படுகின்றன.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

08. அதான் முடிந்ததும ஸலவாத்து ஓத வேண்டும்.

“பிறகு என் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள்”

(ஸஹீஹுல் முஸ்லிம்)

09. பிறகு பின்வரும் துஆவையும் ஓதிக் கொள்ள வேண்டும்.

**அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் த.்.வதித்தாம்மா. வஸ்ஸலாத்தில் காஇமா, ஆத்தி முஹம்மதனில் வஸீலத வல் பழீலா, வப அத்ஹு மகாமன் மஹ்மூதனில்லதீ வ அத்தா**

**மொழி பெயர்ப்பு:**

யா அல்லாஹ்! இந்த பூரண அதானினுடையதும், சிலைான தொழுகையினுடையதும் ரப்பே! முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு நெருக்கத்தையும், மேன்மையையும் வழங்குவாயாக. நீ அவர்களுக்காக வாக்களித்திருக்கும் மகாம் மஹ்மூத் என்ற இடத்தில் அவர்களை எழுப்புவாயாக.

எவர் இந்த துஆவை ஓதுகின்றாரோ அவருக்காக ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய ஷபாஅத் ஹலாலாஹி விடுகின்றது.

“பிறகு எனக்காக அல்லாஹ்விடத்தில் வஸீலா என்ற நெருக்கத்தை கேளுங்கள் ...... யார் எனக்காக நெருக்கத்தைக் கேட்கின்றாரோ அவருக்காக ஷபாஅத் ஹலாலாஹி விடுகின்றது.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

“எவர் அதான் ஓசையை செவிமடுத்த பின்பு “அல்லாஹும்ம” என்ற துஆவைக் கூறுகின்றாரோ அவருக்காக மறுமை நாளில் எனது ஷபாஅத் உரித்துடையதாக ஆகிவிடும்.”

(ஸஹீஹுல் புகாரி)

10. அதான் கூறுபவருக்காக வேண்டி எவ்விதக் கூலியும் வழங்கக் கூடாது. அதான் கூறுபவர் எடுக்கவும் கூடாது.

“தான் அதான் கூறுவதற்கு கூலி எடுக்காத ஒரு முஅத்தினை ஏற்படுத்திக் கொள்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

11. அதான் கூறியவரே இகாமத் கூறவும்

அதானை இரட்டிப்பாகவும் இகாமத்தை ஒற்றைப்படையாகவும் கூறும்படி பிலாலுக்கு ஏவப்பட்டது.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

12. எவர் உயர்ந்த குரலுடையவராக இருக்கின்றாரோ அவரே முஅத்தினாக நியமிக்கப்பட வேண்டும்.

“அப்துல்லாஹ் இப்னு ஸைத்திற்கு “நீ பிலாலுடன் எழுந்து நீர் கண்டதை அவருக்கு நீர்ச் செல்லு. ஏனென்றால் அவர் உன்னை விட சத்தத்தில் உயர்ந்தவராக இருக்கின்றார். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அபூதாவூத், அஹ்மத், ஸஹீஹுஹு
இப்னு ஹுஸைமா – நைலுல்
அவ்தார் - வஸஹ்ஹஹு திர்மிதி)

# ஜனாஸா தொழுகை

**- தொடர் : 05 –**

## கவலை துக்கம் இழப்பு

01. எவராவது ஒருவர் மரணித்து விட்டால் கன்னங்களில் அடித்துக் கொள்வது, ஆடைகளைக் கிழித்துக் கொள்வது, ஜாஹிலிய்யத்தவர்கள் புலம்புவதைப் போன்று புலம்புதல் போன்றவைகள் தடுக்கப்பட்டவைகளாகும்.

கன்னங்களில் அடித்துக் கொள்பவர்களும், ஆடைகளைக் கிழித்துக் கொள்பவர்களும், ஜாஹிலிய்ய அழைப்பை மேற்கொள்பவர் களும் எங்களைச் சார்ந்தவர்களல்லர் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.
(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

02. மையித்திற்காக மொட்டையடிப்பதும், சப்தமிட்டு அழுதுபுரளுவதும் (ஹராம்) தடுக்கப்பட்டவைகளாகும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
மொட்டையடிப்பவர்கள், சப்தமிட்டு அழுது, உருண்டு புரளுபவர்கள், ஆடைகளைக் கிழித்துக்கொள்பவர்கள் ஆகியோரில் இருந்தும் நான் நிரபராதியாகிவிட்டேன்.
(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

03. மரண வீட்டில் முகங்களை நகங்களால் வரண்டிக் கொள்ளுதல், முடிகளைக் கோரிவிடல், தனக்கு அழிவை வரவழைத்துப் பிரார்த்தித்தல் போன்ற அனைத்து விடயங்களும் (ஹராம்) தடுக்கப்பட்டவைகளாகும்.

உம்மு அதிய்யா என்ற ஸஹாபியாப் பெண்மணி கூறுகின்றார்கள்:
நபி ﷺ அவர்கள் எங்களிடம் பைஅத் எடுக்கும்போது, “நல்ல விடயங்களில் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று நிபந்தனையிடும்போது, பின்வருமாறு நிபந்தனையிட்டார்கள் :
நல்ல விடயங்களில் அவர்களுக்கு மாறு செய்யக் கூடாது என்றும், முகங்களை வரண்டிக் கொள்ளக் கூடாது என்றும், அழிவை வேண்டி பிரார்த்திக்கக் கூடாது என்றும், ஆடைகளைக் கிழித்து முடிகளை (தலைவிரி கோலமாக) வைக்கக் கூடாது என்றும் உபதேசம் செய்தார்கள்.
(அபூதாவூத் - ஸனதுஹு ஸஹீஹ். அஹ்காம் 30)

04. ஜாஹிலிய்யத்தில் ஒருவர் மரணித்து விட்டால் அவருக்காக மக்களைக் கூட்டி "மர்திய்யா" என்ற இரங்கற் பாடல்களை பாடுவார்கள். முக்கியமாக மரணித்தவரின் நற்செயல்கள், நற்பண்புகள், அவர் அவ்வாறு செய்தார், இவ்வாறு மக்களோடு நடந்தார், அவர் அரசியலில் நன்கு பங்காற்றினார் என்றெல்லாம் புகழுவதற்கு அரபியில் " என்று "சொல்லப்படும். இதை இன்று முஸ்லிம்கள் என்று கூறுபவர்களும் சர்வசாதாரணமாகச் செய்து வருகிறார்கள். ஆகவே "மர்திய்யா" என்றழைக்கப்படும் இரங்கற்பாக்கள் பாடுவதை முஸ்லிம்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நபி ﷺ அவர்கள் இரங்கற் கவிதைகள் பாடுவதைத் தடுத்தார்கள்.

(அஹ்மத், இப்னுமாஜா - ஸனதுஹு ஸஹீஹ். பத்ஹுல் பாரி )

05. மரணம் அல்லது வேறு ஏதாவது ஒரு சோதனை, துக்கம் ஏற்படும்போது தன்னையும், தன் ரப்பையும் மறந்து தடுக்கப்பட்டச் செயல்கள், வார்த்தை களில் ஈடுபட்டு விடாது, சோதனை ஏற்படும்போது அதன் ஆரம்பத்திலேயே பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நிச்சயமாக பொறுமை என்பது சோதனையின் ஆரம்ப கட்டத்தில்தான் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

06. யாருக்காவது சோதனை, துக்கம், மரணச் சங்கடம், வேதனை ஏற்பட்டால் பொறுமையோடு பின்வரும் துஆவை ஓதவேண்டும்.

நிச்சயமாக நாங்கள் வாழ்வது அல்லாஹ்வுக்காகவே! அவனிடமே மீண்டும் திரும்பிச் செல்வோம். யா அல்லாஹ்! எனக்கு ஏற்பட்ட இச் சோதனையில் எனக்கு நற்கூலியைத் தந்திடுவாயாக! இதைவிட மிகச் சிறந்த ஒன்றையும் எனக்கு தந்தருள்வாயாக!

எந்தவொரு முஸ்லிமிற்காவது ஒரு சோதனை ஏற்பட்டு, அல்லாஹ் அவருக்கு ஏவிய "இன்னாலில்லாஹி........." என்ற மேலுள்ள துஆவை ஓதிவருவாரேயானால், அவருக்கு அந்த சோதனையை விட மிகச் சிறந்த ஒன்றை அல்லாஹ் வழங்கியே தீருவான் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

கண்ணியமிக்க அல்லாஹ் கூறுகின்றான் :

அவர்கள் தங்களுக்கு எத்தகைய கஷ்டம் ஏற்பட்ட போதிலும் நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காவே இருக்கின்றோம். நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம் எனக் கூறுவார்கள். (2 : 156)

07. மரணம், மனக் கஷ்டங்கள், துக்கம், சோதனை ஏற்படும்போது, உள்ளத்தில் கவலை ஏற்பட்டு கண்ணீர் வடிப்பது குற்றமில்லை. எனினும் அல்லாஹ்வுக்கு விருப்பமில்லாத செயல்கள், வார்த்தைகள் வெளியாகி விடக் கூடாது.

தன்னுடைய மகன் இப்ராஹீம் வபாத்தானபோது நிச்சயமாக கண்கள் கண்ணீர் வடிக்கின்றன. உள்ளம் கவலைப்படுகிறது. (இந்நேரத்தில்) "எங்கள் ரப்பு எதை விரும்புவானோஅதைத் தவிர வேறு

எதையும் நாம் சொல்லமாட்டோம்” என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி)

# தஃஸிய்யாத்

01. மரணித்தவரின் உறவினர்களுக்கு பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு ஆறுதல் கூற வேண்டும். அத்துடன் அல்லாஹ்விடம் நன்மையைநாடி பொறுமையாக இருக்கும்படியும் உபதேசம் செய்ய வேண்டும்.

நிச்சயமாக அல்லாஹ் அவன் எடுத்துக் கொண்டவைகளும் அவன் கொடுத்தவைகளும் அவனுக்கே உரியதாகும். மேலும் ஒவ்வொரு படைப்பும் அவனிடத்தில் (மரணிப்பதற்கு) நேரம் குறிக்கப்பட்டதாகவே காணப்படுகிறது. (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

உஸாமா ﵁ அவர்கள் கூறுகின்றார்கள் :

நபி ﷺ அவர்களின் ஒரு மகள், “தன் மகன் மரணித்துவிட்டார். உடனே எங்களிடம் வாருங்கள்” என்று நபி ﷺ அவர்களுக்குச் செய்தியனுப்பினார்கள். அதற்கவர்கள் தன் மகளுக்குச் ஸலாம் கூறி, மேற்கூறப்பட்ட துஆவை ஓதுவதுடன், பொறுமையாக இருந்து அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்க்கும்படியாகவும் வந்தவரிடம் கூறியனுப்பினார்கள். (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

02. மரணித்தவர்களின் உறவினர்களைச் சந்தித்து, நேரடியாக அவர்களிடம் ஆறுதல் கூறவேண்டும். (தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டாலே தவிர)

நபி ﷺ அவர்கள் ஒரு சபையிலிருந்தால் அங்கு நபித்தோழர்களும் இருப்பார்கள். அவர்களில் ஒரு நபித்தோழர் இருந்தார். அவருக்கு ஒரு சிறிய மகனும் இருந்தார். அவர், அவரோடு ஓடி வந்து சபையில் அமரும் போதெல்லாம் பின்னால் ஓடிவருவார். அவரை அவர் தூக்கி முன்னால் வைத்துக் கொள்வார். ஒரு நாள் நபி ﷺ அவர்கள் அவரைப் பார்த்து, "நீ அவரை (மகனை) விரும்புகிறாயா? " என்று கேட்டார்கள். அதற்கு அந்த நபித் தோழர், "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வுக்காக உங்களை நான் விரும்புவது போன்று இந்தப் பிள்ளையையும் விரும்புகின்றேன்" என்றார். (சில தினங்கள் சென்றதன் பின்னர்) அப்பிள்ளை மரணித்து விட்டது. குழந்தையை நினைத்து கவலையில் அந்த நபித் தோழர், அங்கு வந்தால் மகனின் நினைவு வரும் என்று சபைக்கு வருவதை நிறுத்தி விட்டார். (இவர் சபைக்கு சமூகமளிப்பதில்லை என்பதைக் கண்ட நபி ﷺ அவர்கள்) "என்ன! இன்னாரைக் காணவில்லை" என்று கேட்டார்கள். அதற்கு நபித் தோழர்கள், "நீங்கள் சபையில் அடிக்கடி காணும் அவருடைய பிள்ளை மரணித்து விட்டது" என்றனர். உடனே நபி ﷺ அவர்கள் அவரைச் சந்தித்து, அவரின் மகனைப் பற்றிக் கேட்டார்கள். அவர் வபாத்தாகி விட்டதாக அவர் கூறினார். உடனே

நபி ﷺ அவர்கள் அவருக்கு ஆறுதல் கூறும் துஆவை ஓதினார்கள். பிறகு, "இவ்விரண்டில் உனக்கு எது விருப்பமானது? உன் மகன் மரணிக்காமல் உயிரோடிருந்து, நீ அவரைப் பார்த்து மகிழ்ச்சியடை வதையா? அல்லது நீ (மறுமையில்) சுவனத்தின் வாயில்களில் ஒரு வாயிலுக்கு வர உன் மகன் உனக்கு முன்னால் வந்து நின்று கொண்டு, உனக்காக வாயிலைத் திறந்து விடுவதையா? " என்று கேட்டார்கள். அதற்கு அந்த நபித்தோழர், "அல்லாஹ்வின் தூதரே! எனக்கு முன் அவர் சென்று, எனக்காக வாயலைத் திறப்பதே எனக்கு மிக விருப்பமானதாகும்" என்றார். அதற்கு, "அது உனக்கு நடக்கும்" என்றார்கள். அப்போது அங்கிருந்த அன்ஸாரிகளில் ஒருவர் எழுந்து, "அல்லாஹ்வின் தூதரே! (என்னை அல்லாஹ் உங்களுக்கு அர்ப்பணமாக்கட்டும், என்று கூறிவிட்டு) இது அவருக்கு மட்டும் நடக்கவிருக்கின்றதா? அல்லது எங்கள் அனைவருக்குமா?" என்று கேட்க, "இல்லை, இது உங்கள் அனைவருக்கும்" என்று கூறினார்கள்.

(நஸாஈ,அஹ்மத், இப்னு ஹிப்பான், அல்ஹாகிம் - ஸனதுஹு ஸஹீஹ் - அஹ்காம் 162)

03. மரண வீட்டில் அங்குள்ளவர்கள் அழுதுகொண்டிருந்தால், மூன்று நாட்களுக்குப் பின் அங்கு சென்று அழவிடாது அவர்களைத் தடுக்க வேண்டும்.

ஜஃபர் பின் அபூதாலிப் ﵁ அவர்கள் ஷஹீதான போது, அவர்களின் குடும்பத்தார்களிடம் நபி ﷺ அவர்கள் சென்று, மூன்று நாட்களில் மீண்டும் வருவதாகக் கூறிச் சென்றார்கள். பிறகு அங்கு சென்று, “இதற்குப் பிறகு எனது சகோதரருக்காக அழாதீர்கள்” என்று கூறினார்கள்.

(அஹ்மத், அல் ஹாகிம் - ஸனதுஹு ஸஹீஹ். - அஹ்காமுல் ஜனாஇஸ் )

# அடக்கஸ்தலம்

01. அடிக்கடி அடக்கஸ்தலங்களுக்குச் சென்று மரணத்தை ஞாபகம் செய்து கொள்ள வேண்டும். படிப்பினைகள் பெற வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

நீங்கள் மண்ணறைகளைச் சந்தியுங்கள். நிச்சயமாக அது மரணத்தை ஞாபகமூட்டும். (ஸஹீஹ் முஸ்லிம்)

**மற்றுமொரு அறிவிப்பில் பின்வருமாறு வந்துள்ளது:**

அவைகளை (மண்ணறைகளை)ச் சந்தியுங்கள். நிச்சயமாக அதிலே படிப்பினைகள் இருக்கின்றன.
( அஹ்மத், அல்ஹாகிம் - ஸனதுஹுۥ ஸஹீஹ். அஹ்காமுல் ஜனாஇஸ் )

02. அடக்கஸ்தலங்களுக்குச் செல்பவர்கள் அங்கு அடங்கப்பட்டிருப் பவர்களுக்கு பின்வருமாறு ஸலாம் கூற வேண்டும்.

இவ்வுறைவிடங்களின் மு.ஃ.மின்கள்மீதும், முஸ்லிம்கள்மீதும் சாந்தி உண்டாவதாக! நிச்சயமாக நாமும் அல்லாஹ் நாடினால் உங்களுடன் சேரக் கூடியோரே! எங்களுக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடத்தில் ஆரோக்கியத்தை வேண்டுகின்றேன்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

புறைதா ﵁ அவர்கள் கூறுகின்றார்கள் :
அடக்கஸ்தளங்களுக்குச் செல்பவருக்கு நபி ﷺ அவர்கள் (துஆக்களைக்) கற்றுக் கொடுப்பவர்களாக இருந்தார்கள். அவர்களுக்குச்

ஸலாம் சொல்பவர் "அஸ்ஸலாமு அலா அஹ்லித்தியார்" (மண்ணறைவாசிகள் மீது அல்லாஹ்வின் சாந்தி உண்டாகட்டும்!) என்று கூறுவார். (ஸஹீஹ் முஸ்லிம்)

03. முஸ்லிம்களின் கப்ருகளுக்கு மத்தியில் செருப்புடன் நடப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பஷீர் என்பவர் கூறுகின்றார் :

நான் நபி ﷺ அவர்களுடன் நடந்து கொண்டிருந்தேன். அப்போது முஸ்லிம்களின் மையவாடிக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் நடந்து கொண்டிருக்கும்போது, அவர்களின் பார்வை ஒரு பக்கமாகச் சென்றது. அவ்வேளை அங்கே ஒரு மனிதர் இரு கால்களிலும் செருப்பணிந்தவராக கப்ருகளுக்கு மத்தியில் நடந்து கொண்டிருந்தார். இதைக்கண்ட நபி ﷺ அவர்கள் "செருப்புகள் அணிந்திருப்பவரே! உம்முடைய இரு செருப்புகளையும் கழற்றுவீராக!" என்றார்கள். அவர் திரும்பிப் பார்த்து

நபி ﷺ அவர்களை அறிந்து கொண்டதும், தன்னிரு செருப்புகளையும் கழற்றி அவைகளை எறிந்து விட்டார்.
(அபூதாவூத், நஸாஈ, அஹ்மத் - ஸனதுஹு ஸஹீஹ். அஹ்காமுல் ஜனாஇஸ் )

04. மண்ணறைகளில் அடக்கப்பட்டிருப்பவர்களுக்கு அங்கு செல்பறவர்கள் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

ஆயிஷா அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

நிச்சயமாக நபி ﷺ அவர்கள் ஜன்னதுல் பகீ.். என்ற (முஸ்லிம்களின்) அடக்கஸ்தலத்திற்குச் சென்று அவர்களுக்காகப் பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள். (அஹ்மத் - ஸஹீஹ் - அஹ்காம்)

05. அடக்கஸ்தலங்களில் பிரார்த்தனையில் ஈடுபடும்போது, தன்னிரு கைகைளையும் நன்றாக கிப்லாவை முன்னோக்கி நீட்டிப் பிரார்த்திக்க வேண்டும். கைகளை முடக்கிக் கொண்டு துஆச் செய்வது நபி வழியல்ல.

நபி ﷺ அவர்கள் பகீஃவுக்கு வந்து நீண்ட நேரம் அங்கு நின்ற பிறகு தங்கள் இரு கைகளையும் உயர்த்தினார்கள். இப்படி மூன்று முறை செய்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

06. கப்ருகளுக்கு மேல் பள்ளிகள் கட்டக் கூடாது. கப்ருகளை முன்னோக்கித் தொழவும் கூடாது,

யூதர்களை அல்லாஹ் சபிப்பானாக! ஏனெனில் அவர்கள் தங்கள் நபிமார்களின் மண்ணறைகளைப் பள்ளிகளாக்கிக் கொண்டனர் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

“மண்ணறைகளை நோக்கித் தொழாதீர்கள்” என்றும் நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

## 07. அடக்கஸ்தலங்களில் ஜனாஸாத் தொழுகை நடாத்தக் கூடாது.

மண்ணறைகளுக்கு மத்தியில் ஜனாஸாத் தொழுகை நடாத்துவதை நபி ﷺ அவர்கள் தடுத்தார்கள்.
(இப்னுல் அ.்ராபி, தனது “மு.்.ஜம்” என்ற நூலிலும், அத்தபரானி “அல் அவ்ஸத்” என்ற நூலிலும் பதிவு செய்துள்ளனர். - ஸனதுஹு ஹஸன் - அஹ்காம்)

## 08. ஆண்களுக்கு “அஸ்ஸியாரத்” (மண்ணறைகளைச் சந்தித்தல்) ஸுன்னத்தாக்கப்பட்டுள்ளது போன்று பெண்களுக்கும் ஸுன்னத்தாக் கப்பட்டுள்ளது.

“(மண்ணறைகளுக்குச் சென்றால்) அவர்களுக்கு என்ன சொல்ல வேண்டும் யாரஸூலுல்லாஹ்? ” என ஆயிஷா அவர்கள் கேட்ட போது, “அஸ்ஸலாமு அலா அஹ்லித்தியார் என்று கூறு” என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

அப்துல்லாஹ் பின் அபூ முலைக்கா ؓ அவர்கள் கூறினார்கள்

நிச்சயமாக ஒரு நாள் ஆயிஷா அவர்கள் மையவாடியிலிருந்துத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். “உம்முல் மு.்.மினீனே! நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?” எனக் கேட்டேன். “நான் என் சகோதரர் அப்துர் ரஹ்மானின் கப்ரை தரிசித்து விட்டு வருகின்றேன்” என்றார்கள். அதற்கு, “நபி ﷺ அவர்கள் கப்ருகளைத் தரிசிப்பதைத் தடுக்க வில்லையா?” எனக் கேட்டேன். அவர்கள் “ஆம்” எனக் கூறிவிட்டு,

“மண்ணறைகளைச் சந்திப்பதை தடுப்பவர்களாக இருந்தார்கள். பிறகு அவைகளைச் சந்திக்கும்படி கட்டளையிட்டார்கள்” எனக் கூறினார்கள்.

(அல் அத்ரம் தனது “ஸுனன்” என்ற நூலிலும், ஹாகிம், இப்னுமாஜா, பைஹகி இவர்களும் சில மாற்றங்களுடன் றிவாயத் செய்துள்ளனர். ஸனதுஹு ஸஹீஹ். அஹ்காம் )

# மரணித்தவர்கள்

01.மரணித்தவர்கள் யாராக இருந்தாலும் உயிரோடிருப்பவர்கள் அவர்களைக் குறை கூறுதல், திட்டுதல் போன்ற செயல்களிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் உயிரோடிருப்பவர்களுக்கு அது வேதனையைத் தரலாம்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
மரணித்தவர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில் அவர்கள் செய்தனுப்பியவைகளின் வினைகளைச் சந்திக்கச் சென்று விட்டார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

**மற்றுமொரு அறிவிப்பில் :**

மரணித்தவர்களைத் திட்டுவதன் மூலம் உயிரோடிருப்பவர்களை நோவினை செய்யாதீர்கள்.

(அஹ்மத் - ஸனதுஹு ஸஹீஹ்)

**மற்றுமொரு அறிவிப்பில் :**

மரணித்தவர்களை திட்டாதீர்கள். எங்களில் உயிரோடுள்ள வர்களை நீங்கள் நோவினைப்படுத்தியவர்களாவீர்கள்.

(அஹ்மத் - ஜய்யித் என்ற தரத்திலுள்ளது. - புலூகுல் அமானி)

02. இறந்து போன முஸ்லிம்களுக்காக வேண்டி உயிரோடுள்ளவர் கள் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோர வேண்டும்.

“எவர்கள் இவர்களுக்குப் பின் வந்தார்களோ, அவர்கள், “எங்கள் ரப்பே! எங்களையும், எங்களுக்கு முன் விசுவாசங் கொண்ட எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக!

(ஷூரத்துல் ஹஷ்ர் : 10 )

03. மரணித்தவர் காபிராக இருந்து, அவரின் உறவினர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் கூட மரணித்தவர் காபிர்தானே என்று அவரை திட்டக் கூடாது.

(மரணித்த) எந்தவொரு காபிரையும் திட்டுவதன் மூலம், எந்த ஒரு (உயிரோடுள்ள) முஸ்லிமையும் நோவினை செய்யாதீர்கள்.

( ஹாகிம் - ஸனதுஹு ஸஹீஹ் - புலூகுல் அமானி )